(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(6).]

# பாராளுமன்றத்தின்
# 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2025 ஜூலை 11, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2025 ஜூலை 22, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்,— மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தின் 64, 65, 66, 69 மற்றும் 70 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 84 ஆம் பிரிவின் கீழ் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 மார்ச் 27 ஆம் திகதிய 2429/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— திருத்தப்பட்டவாறான 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பீடிக்கான வரியொன்றினை விதித்தல் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2430/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு) சட்டத்தின் 7(1) மற்றும் 8(2) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 15 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையின் தவிசாளரினால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய 2343/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 யூன் 04 ஆம் திகதிய 2439/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஜூலை 23, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இறப்பர் கட்டுப்பாடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஜூலை 25, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஆகஸ்ட் 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

307/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) இந்தப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இந்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான சம்பளங்கள் மற்றும் ஊதியங்களுக்கான மொத்த மாதாந்த மற்றும் வருடாந்தச் செலவினங்கள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) அரசாங்க ஆசிரியரொருவரின் சராசரி மாதாந்தச் சம்பளம் எவ்வளவென்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான காலக்கெடு யாதென்பதையும்;

(iii) 100 மாணவர்களை விடக் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலை களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அத்தகைய பாடசாலைகளின் பெயர்களை, மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த ஐந்து வருடங்களில் அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) எதிர்வரும் ஐந்து வருடங்களில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

வெவ்வேறாக அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

334/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டாகும் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவிக்கும் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவிக்கும் உரிய சம்பளத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது அந்தப் பதவிகளுக்குரிய சம்பளத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) சம்பளத்திற்கு மேலதிகமாக, அந்தப் பதவிகளுக்குரிய பிற கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) 2023 ஆம் ஆண்டாகும் போது தற்போதும் மேற்படி பிற கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பதவிகளுக்காக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனைய நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களிலிருந்தும் வெவ்வேறாகச் சம்பளம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்த நிறுவனங்களினால் வழங்கப்படும் சம்பளம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிற பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) பிற பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் மாதாந்தக் கொடுப்பனவானது ஒவ்வொரு பணிப்பாளருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

569/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கைக்கு மீண்டும் வந்து பணிபுரிய வேண்டும் என்ற கடுமையான நிபந்தனையின் கீழ், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டம் அல்லது பிற உயர் கல்வியை நிறைவுசெய்வதற்காக சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன்கீழ், 2005 ஆம் ஆண்டின் பின்னர் முன்னாள் சனாதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நிதி வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அத்தகையோரில் கலாநிதி பட்டம் பெற்று மீண்டும் நாடு திரும்பிய மற்றும் நாடு திரும்பாதோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(v) இலங்கைக்கு மீண்டும் திரும்பாத நபர்கள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) இவர்களுக்காக அரசாங்கத்தால் செலவிடப்பட்ட நிதி அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

806/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளுள் தொழில்நுட்பம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் க.பொ.த (உ/தரம்) வகுப்புகள் நடைபெறுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மாத்தளை மாவட்டத்தில் தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் கல்வி கற்பதனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

856/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல்மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களைப் பயன்படுத்துகின்ற அலுவலர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களை மக்கள் பிரதிநிதிகள் பயன்படுத்துகின்றார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியின் பெயர் மற்றும் பதவி வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் மாகாண ஆளுநர்களின் பெயர்கள் ஒவ்வொரு மாகாண வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மாகாணத்தினதும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மாகாணத்திலும் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அவற்றில் இன்றளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

858/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின், பொது மக்கள் பாதுகாப்பு பிரிவின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் யாவை;

(ii) தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், மேற்படி நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அத்தகைய விசாரணைகள் எவ்வாறான விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன;

(iv) அத்தகைய விசாரணைகளுக்கமைய, இன்றளவில் கைது செய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை ஒவ்வொரு விசாரணையின்படி வெவ்வேறாக யாது;

(v) மேற்படி விசாரணைகளுக்கமைய, இன்றளவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை யாது;

(vi) ஒவ்வொரு விசாரணை தொடர்பிலும் கைப்பற்றப்பட்டுள்ள ஆயுதங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

863/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பிரிவெனா வகைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களில் கற்பிக்கப்படும் பாடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அத்தகைய பாடங்கள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் மேற்படி பிரிவெனாக்களில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பிரிவெனாக் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) புதிய கல்விச் சீர்திருத்தங்கள் ஊடாக பிரிவெனாக் கல்வியுடன் தொடர்புடைய விடயப்பரப்பு திருத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

867/2025

கௌரவ லால் பிரேமநாத்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுமுள்ள மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைக்குரிய வைத்தியசாலைகளின் எண்ணிக்கை, அரசாங்க வைத்தியசாலைகளின் தரவரிசைப்படுத்தலுக்கு அமைவாக மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையும் உள்ளடங்கும் தரம் மற்றும் ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் சேவையை பெற்றுக் கொள்ளும் ஆட்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) கொடபொல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தெனியாய ஆதார வைத்தியசாலை 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான வைத்தியசாலை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அந்த வைத்தியசாலை தற்போது மண்சரிவு அச்சுறுத்தலை எதிர்கொண்டு மிகவும் ஆபத்தான நிலைமையிலுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

878/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனைபற்று பிரதேசச் செயலாளர் பிரிவில், அரசாங்கத்தினால் 'அளிப்புப் பத்திரங்கள்' அல்லது 'காணி உரிமப் பத்திரங்கள்' ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய தகவல்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

957/2025

கௌரவ அஜித் கிஹான்,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் கடற்கரை வழியாக, கடந்த காலத்தில் சட்ட விரோதமான முறையில் போதை வஸ்துகள், போதைப் பொருட்கள் மற்றும் பிற பொருட்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதையும்;

(ii) அத்தகைய சட்டவிரோத செயல்கள் இன்றளவிலும் மேற்கொள்ளப்படுவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், அந்த நிலைமையைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2025 ஆகஸ்ட் 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

633/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 முதல் 2019 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்தினால் 2020-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில், இன்றளவில் நிறைவடைந்துள்ள வழக்கு விசாரணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அவ்வழக்குகள் யாவையென்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளில், சட்டத்துறை தலைமை அதிபதியினால் மீளப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவ்வழக்குகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

639/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக ஏற்பட்ட பெரும் நெரிசலுக்குத் தீர்வாக, அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட அலுவலர்களைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை அமைக்க இலங்கைச் சுங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்ட அலுவலர்களின் பெயர்கள், அவர்களின் பதவிப் பெயர்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சோதனையிடாமல் விடுவிக்கப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) இலங்கைச் சுங்கமானது சோதனையின்றி கொள்கலன்களை விடுவிக்கும் போது கவனத்திற்கொள்ளும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(v) இலங்கைச் சுங்கமானது சோதனையின்றி கொள்கலன்களை விடுவிப்பது ஒரு பாரிய ஆபத்து என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

653/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை 2025.02.10 ஆம் திகதி நாடு தழுவிய மின் துண்டிப்புக்கான தீர்மானத்தை மேற்கொண்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) அத்தகைய தீர்மானமொன்றை மேற்கொள்வதற்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iii) மின் துண்டிப்பை மேற்கொள்ளாது, தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

704/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அத்தகைய வைத்தியசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய ஒவ்வொரு வைத்தியசாலையிலும் காணப்படுகின்ற வைத்தியர், தாதியர், நிறைவுகாண் மருத்துவச் சேவைகள் மற்றும் சிற்றூழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைகளில் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

996/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாயப் பயிர்களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் உள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) அவர்களுக்கு தமது விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் யாவை;

(iii) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பொறுப்பு யாது;

(iv) இத்திணைக்களம் இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு தடைகள் மற்றும் அசௌகரியங்கள் இன்றி தமது விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்குப் பெற்றுக்கொடுத்துள்ள வசதிகள் மற்றும் அணுகுமுறைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஆகஸ்ட் 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

722/2025

கௌரவ டபிள்யூ.எச்.எம். தர்மசேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய அரச காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மொனராகலை மாவட்டத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) அந்தக் காணிகளுக்கு உறுதி வழங்குதல் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளில் சுமார் 25-30 ஆண்டுகளாக, நீண்ட காலம் இருப்பாட்சி கொண்டுள்ள நபர்களுக்கு காணி உறுதிகள்/உரிமங்கள் இதுவரை வழங்கப்படாதுள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) அந்த நபர்களுக்கு காணி உறுதிகள்/உரிமங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

918/2025

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்தியப் பிரதமரின் இலங்கைக்கான விஜயத்தின் போது இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களினதும் விவரங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்தினையும் அடையாளம் கண்டு அங்கீகரிப்பதில் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்களை அடையாளப்படுத்தும் செயன்முறையின் போது அவற்றுடன் தொடர்புடைய பங்கீடுபாட்டாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், கலந்தாலோசிக்கப்பட்ட நபர்களின்/அமைப்புக்களின் பெயர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய விவரங்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

970/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது நிருவாக சுற்றறிக்கை இல 06/2006 இன் பிரகாரம் PL 1, PL 2 மற்றும் PL 3 ஆகிய சம்பள அளவுத்திட்டங்களில் வைக்கப்பட்டுள்ள அலுவலர்களில் பட்டதாரிகளும் இருக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பட்டதாரிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி கீழ் உழைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகளுக்கு தகுந்த சேவை நிலையங்கள் பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக பின்பற்றப்படும் செயன்முறை யாதென்பதையும்;

(v) மேற்படி கீழ் உழைப்புப் பட்டதாரிகள் மத்தியில் 40 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகளும் இருப்பதால் அவர்களுக்கு வழங்கப்படும் தீர்வு யாதென்பதையும்;

(vi) மேற்படி கீழ் உழைப்பு நிலையிலுள்ள பட்டதாரி அலுவலர்களுக்கு அவர்களின் தகைமைகளுக்கமைய பரீட்சை ஏதுமின்றி பதவி உயர்வு வழங்கும் செயன்முறையொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(vii) இன்றேல், அவ்வாறான செயன்முறையொன்று அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

976/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.07.12 ஆம் திகதி அட்டாளைச்சேனை, கப்பற்துறையிலுள்ள மீன்பிடித் துறைமுகத்திலிருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்கப் புறப்பட்டுச்சென்ற, சின்ன பாலமுனைப் பிரதேசத்தில் வசிக்கும் ஈ.எல். இர்பான் என்ற மீனவர் தமிழகக் கடற்கரைக்கு அடித்துச் செல்லப்பட்டிருந்ததுடன் 130 நாட்களுக்குப் பிறகு 2024.11.20 ஆம் திகதி அவர் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அழைத்து வரப்பட்டார் என்பதையும்;

(ii) இச்சம்பவத்தின்போது, அட்டாளைச்சேனை 06 ஆம் பிரிவில் வசித்துவந்த கே.எஸ். நிஷ்பார் என்ற மீனவர் மரணமடைந்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மரணமடைந்த கே.எஸ். நிஷ்பார் என்ற மீனவருக்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஈ.எல். இர்பான் என்ற மீனவருக்கும் அவரது சேதமடைந்த படகுக்கும் இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட மீனவர்களுக்கு செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகைகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1023/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உரத்தை ஒழுங்குபடுத்தல் சட்ட சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) மேற்படி சட்டத்திற்கு அமைவாக போலி உர உற்பத்தியை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களுக்கு எதிராக விதிக்கக் கூடிய உச்சப்பட்ச தண்டனை யாது என்பதையும்;

(iii) சந்தையில் காணப்படுகின்ற உரத்தின் தரம் பரிசோதிக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) இலங்கைக்குள் சேதனப் பசளையை அல்லது இரசாயனப் பசளையை உற்பத்தி செய்வதற்கான அல்லது அவற்றை உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்கான வேலைத் திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1065/2025

கௌரவ அசோக குணசேன,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்பதெனிய, அலவ்வ, ஹூம்புலுவ கிராமத்தில் காணி பிணக்கொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 1911 ஆம் ஆண்டின் நில அளவையின் பிரகாரம் ஆக்கப்பட்ட 455 ஆம் இலக்க ஹூம்புலுவ கிராம நில அளவை வரைபடம் செல்லுபடியாகுமா என்பதையும்;

(iii) 1910 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி கிராமத்துக்குரிய காணிகளை, தனியார் பரம்பரை காணிகளாக காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) 2621 ஆம் இலக்க அரச எழுத்தாணை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி அரச எழுத்தாணை பதிவு செய்யப்பட்ட திகதி மற்றும் ஏற்புடைய காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) ஹூம்புலுவ விஹாரையை, 2013 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(vii) ஹூம்புலுவ கிராம மக்கள் பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வந்த அறுதி உறுதி காணிகளுக்கான உரிமையை 2017 ஆம் ஆண்டுக்கு பின்னர் இழக்கச் செய்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(viii) அது தொடர்பாக கிராம மக்களுக்கு விழிப்புணர்வூட்டாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ix) இதன் போது இலங்கை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 'மக்களின் இறைமை தத்துவம்' மீறப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(x) மேற்படி பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1067/2025

கௌரவ சானக மாதுகொட,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடும்ப நல மருத்துவ மாதுக்களுக்கு தற்பொழுது வழங்கப்படுகின்ற இணைந்த படிகள் போதுமானதாக இல்லையென்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படிக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படிக் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் காணப்படுகின்ற வரையறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1069/2025

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கல்வி நிருவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் சிரேஷ்ட கல்வியியலாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் நடைமுறையை இற்றைப்படுத்தும்போது, முன்பிருந்த இளங்கலை பட்டப்படிப்பில் வகுப்புச் சித்தி பெற்றிருக்கும் வேண்டும் என்ற தகைமை நீக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறே இதற்கு முன்பிருந்த கற்பித்தல் அனுபவம் தொடர்பான தகைமையும் நீக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் நடைமுறையை இற்றைப்படுத்தும் போது, முன்பிருந்த 'ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற அனுபவம்' என்பதற்குப் பதிலாக 'ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற அனுபவம்' எனத் திருத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி ஆட்சேர்ப்புத் தகைமைகளை திருத்துவதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1072/2025

கௌரவ அஜந்த கம்மெத்தகே,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்திலுள்ள அரச காணிகளில் தனியார் தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அந்தக் காணிகள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு தோட்ட நிறுவனத்தினதும் பெயர், வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் அந்தக் காணிகளில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தோட்ட நிறுவனங்களில், வழங்கப்பட்டுள்ள காணிகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத தோட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி காணிகளை மீண்டும் அரசாங்கத்திற்கு கையகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி தோட்ட நிறுவனங்களிடமிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்கப் பெறவேண்டிய வருமானங்கள் உரிய முறையில் அறவிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1080/2025

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிபுணத்துவ மருத்துவ சேவைகளின் எண்ணிக்கை, அவற்றின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு சேவையிலும் உள்ள நிபுணத்துவ வைத்தியர்களின் எண்ணிக்கை;

(ii) நிபுணத்துவ வைத்தியர்களின் பற்றாக்குறை காரணமாக குறிப்பிட்ட சேவை காணப்படாத, 2020 வகைப்படுத்தலுக்கு ஏற்ப இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் விசேட சிகிச்சை வைத்தியசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றிலான வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(iii) 2020-2024 வரையில் ஒவ்வொரு நிபுணத்துவ வைத்திய சேவையிலிருந்தும் ஓய்வுபெற்ற, சேவையிலிருந்து விலகிய, வெளிநாட்டு விடுமுறை பெற்றுக்கொண்ட, உயிரிழந்த மற்றும் இராஜினமா செய்துள்ளவர்களின் எண்ணிக்கை;

(iv) 2020-2024 வரை ஒவ்வொரு நிபுணத்துவ மருத்துவ சேவைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை;

(v) பற்றாக்குறை / ஓய்வு பெறுவதற்கு ஏற்ப போட்டிப் பரீட்சை மூலம் தேவையான எண்ணிக்கைக்கேற்ப நிபுணத்துவ வைத்தியர்கள் தெரிவு செய்யப்படுவார்களாயின், கடந்த 5 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு வருடத்திலும் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை;

(vi) 60 வயதை விஞ்சிய மற்றும் 55-60 இற்கு இடைப்பட்ட நிபுணத்துவ வைத்தியர்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாது என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நிபுணத்துவ மருத்துவ சேவைகள் கிடைக்கப் பெற வேண்டிய தரவரிசைப்படுத்தப்பட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) பட்டப் பின் படிப்பு நிறுவனமும் உரிய கல்லூரியும் தேவையானளவு நிபுணத்துவ வைத்தியர்களை சித்தியடையச் செய்வதில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை;

(iii) அதனை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2025 செப்தெம்பர் 12, வெள்ளிக்கிழமை
# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இனங்களின் அல்லது மதங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடுவதைத் தடை செய்தல்,— இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடல் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், இனங்களை அல்லது மதங்களைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டு தற்போது செயற்படும் அரசியல் கட்சிகளின் பெயர்களிலிருந்து அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபித்தல்,— தாக்குதல், கடத்தல், கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், கொலை மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்கும், ஊழியர்கள் பாதுகாப்பாக இலங்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2025

கௌரவ லால் பிரேமநாத்,— அடிமட்டத்தில் செயற்படும் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பிலும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,— மக்களுக்கு மிக நெருக்கமான மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களாக காணப்படுகின்ற அடிமட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலும் பெரும்பாலும் மக்கள் அதிருப்தியான நிலையில் இருப்பதால் இந்நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக அவதானம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் கட்டமைப்பை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— இலங்கை ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், நாட்டின் சுற்றுலாத்துறை உள்நாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் தாழ்நில மழைக்காடுகளில் உலக மரபுரிமையாக விளங்கும் சிங்கராஜ வனமும், விசேட விலங்குகள் மற்றும் தாவர இனங்கள் செறிந்து காணப்படும் கன்னெலிய காடு மற்றும் ஹினிதும மலையை உள்ளடக்கிய மலைத்தொடரின் (ஹேகொக்) உயிரியல் அமைப்புமுறை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் விசேட கவனத்தை ஈர்த்துள்ள சூழல் தொகுதியாக உள்ளதாலும், இச் சூழல் அமைப்பு முறையைக் கொண்ட பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் தொகுதியை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2025

கௌரவ ருவன் மாபலகம,— பாடசாலைக் கலைத்திட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுக்கவியல் விடயதானங்களை உள்ளடக்குதல்,— இந்நாட்டு மக்கள் எதிர்கொள்கின்ற நாளாந்த பிரச்சினைகளுக்கான முக்கிய காரணமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் சட்டம் பற்றிய அறியாமை அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், சட்டம் பற்றிய அறியாமை சட்டத்தின்முன் குற்றமற்றவராக இருப்பதற்கான விடயமாக அமையாததாலும், பாடசாலைக் கலைத்திட்டம் சிக்கலாக அமைவதை தவிர்த்து 6 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரை பாடசாலை மாணவர்களின் குடியுரிமைக் கல்விப் பாடத்திட்டத்தில் நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய கற்பித்தலை உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2025

கௌரவ ரோஹண பண்டார,— பேராசிரியர் பதவிகள் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— தற்போது எமது சமூகத்திலுள்ள அநேகமானோர் பேராசிரியர், கலாநிதி போன்ற பதவிகளையும், பெயர்களையும் தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால், அதனை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடத்தை உரிய முறையில் தொழிற்படவைப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம் நிறுவப்பட்டு, இன்றளவில் 35 வருடங்கள் கடந்திருப்பதாலும், தற்போது அந்த ஆய்வுகூடம் முறையாக தொழிற்படாததாலும், இறக்குமதி செய்யப்படும் பெருமளவான மருந்துகள் உரிய தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றமையால், அந்நிலையை தவிர்ப்பதற்காக உரிய வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.47/2025

கௌரவ ரோஹண பண்டார,— விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பித்தல்,— நாட்டிலுள்ள விவசாயிகளுக்கான நலன்புரித் திட்டங்களை வகுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குரியது என்பதாலும், இந்நாட்டின் மக்கள் தொகையில் பெருமளவானோர் விவசாயிகள் என்பதாலும் விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப் படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.50/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பைனஸ் செய்கையால் நீர் மூலங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— விசேடமாக ஊவா மாகாணம் உட்பட மலையகப் பிதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பைனஸ் செய்கையால் நீர் மூலங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை அகற்றி, பயன்தரு உள்நாட்டு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2025

கௌரவ லால் பிரேமநாத்,— உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவில் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்,— கடந்த காலங்களில் இலங்கை முழுவதுமுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் பொது நிதியானது பாரியளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய சகல அலுவலர்களுக்கும் நிலவும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/2025

கௌரவ உபுல் கித்சிறி,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய மடுவன்வெல பிரபுமனை (வலவ்வ) முதற்கொண்டு இலங்கையில் புராதன பெறுமதி வாய்ந்த தலங்களைப் பாதுகாத்தல்,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான மடுவன்வெல பிரபுமனை முதற்கொண்டு இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான புராதன பெறுமதி வாய்ந்த தலங்கள் காணப்படுவதாலும், இத்தலங்கள் சுற்றுலா ஈர்ப்பைக் கொண்டுள்ளதாலும், தற்போது இவை கடுமையாக பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாலும், இவற்றின் மரபார்ந்த தொன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாத்து அத்தகைய தலங்களுக்குச் சொந்தமான காணிகளை துரிதமாக அளவை செய்தும் நிர்ணயம் செய்தும் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்த அவற்றைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— "இலங்கைப் பைத்துல்மால் நிதியம்" என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக "பைத்துல்மால்" என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் "இலங்கைப் பைத்துல்மால் நிதியம்" என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் (Student Counsellor) ஒருவரை நியமித்தல்,— தற்போது பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு உளவியல் சார்ந்த பின்னடைவுகள் காணப்படுவதனாலும், இந்த நிலைமைகள் அவர்களின் உடல் மற்றும் சமூக இருப்பில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துவதனாலும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்கென பாடசாலை உளவள ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி பதவியில் பாடசாலை ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளடங்குவதன் காரணமாக இதன் ஊடாக எதிர்பார்க்கப் படுகின்ற சேவைகள் பயனுறுதிமிக்கவாறு கிடைக்கப்பெறாமையினாலும், சகல பாடசாலை களிலும் உளவள ஆலோசகர் ஒருவரின் அவசியத்தன்மை எழுந்துள்ளதனாலும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் ஒருவரை நியமனஞ் செய்யத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— "ரட்டவிருவன்" (புலம்பெயர் வீரர்கள்) என்றழைக்கப்படும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்தல்,— இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தை உயிரூட்டுவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களால் வழங்கப்படும் பங்களிப்பு மிகவும் விசேடமானது என்பதனாலும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் பல வருட காலமாக தொழில் செய்த பின்னர் இலங்கைக்கு மீண்டும் வந்து தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்கின்றபோது ஒரு சில சந்தர்ப்பங்களில் மீண்டும் அவர்களுக்கு தொழில் புரிவதற்கான ஆற்றல் இல்லாததன் காரணமாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதனாலும், அரசாங்கம் அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்து குறித்ததொரு சதவீதத்தைப் பயன்படுத்தி ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபித்து, ஓய்வூதியத் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.